**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.74/2022 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு.சந்திரசேகரன் |
| Husband/Father Name | திரு.ஆறுமுகம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.07.2025.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. பிரதிவாதி நந்தினி என்பவர் என் மனைவியின் அண்ணன் மனைவி ஆவார். வாதி பவானி என்பவரின் கணவரின் பெயர் தினகரன் என்றால் சரிதான். 2018-ம் வருடம் ஆகஸ்ட் 20-ம் தேதி தினகரன் பிரதிவாதி நந்தினி என்பவருடன் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்ததத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்ததத்தில் சொத்தின் மொத்த கிரைய மதிப்பு ரூ.15 லட்சம் என பேசி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரையத்தொகையில் ரூ.10 லட்சத்தை நந்தினியின் வங்கி கணக்கில் தினகரன் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அந்த பணத்தை பெற்ற நந்தினி அந்த ரூ.10 லட்சத்திற்கு மாதாமாதம் ரூ.100-க்கு ரூ.3 வட்டி தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வட்டி தருவதாக நந்தினி ஒப்புக்கொள்ளவில்லை என சொல்கிறேன் என்றாலும், நந்தினி மாதம் ரூ.30,000/- வீதம் மொத்தம் ரூ.2,60,000/- வட்டியாக கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. இடையில் நந்தினி வட்டி சரிவர செலுத்தாததால் அந்த 2018 கிரைய ஒப்பந்தம் 13.08.2021 அன்று ரத்து செய்யப்பட்டு, அதே தேதியில் தினகரனின் மனைவி பவானி பேரில் ரூ.17 லட்சத்திற்கு புதிய கிரைய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 13.08.2021-ம் தேதி ஏற்படுத்தப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தின் படி ரூ.16 லட்சம் பிரதிவாதிக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும், 2018 கிரைய ஒப்பந்தப்படி ரூ.10 லட்சம் மட்டுமே என்றாலும் தவறு. நந்தினி என்பவர் அவரது சொத்தின் பேரில் அடமான கடனாக தான் ரூ.10 லட்சம் பெற்றுள்ளார் என்றாலும், கிரையம் செய்து கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் தவறு. வழக்கு சொத்து ஆற்காடு நகர்

எல்லைக்குள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீடு மொத்தம் ரூ.50 லட்சம் பெறுமா என்றால் ரூ.20 லட்சம் தான் பெறும். வழக்கிற்காக ரூ.20 லட்சம் தான் விலை போகும் என சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.50 லட்சம் மதிப்புள்ள சொத்தை ரூ.17 லட்சத்திற்கு கிரையம் செய்ய பிரதிவாதி எப்போதும் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் அவர் அந்தச் சொத்தை அடமானமாக வைத்து தான் பணம் ரூ.10 லட்சம் பெற்றார் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே வழக்கு சொத்தை வாங்க வேண்டும் என்று வாதியின் கணவர் நினைத்திருந்தால் 2018-ம் வருடத்திலேயே கிரையப்பத்திரம் பதிவு செய்திருக்கலாம் என்றாலும், அடமானமாக பெற்று கடன் கொடுத்ததால் தான் அந்தப் பத்திரத்தை பின்னர் ரத்து செய்துவிட்டு, அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு தனது மனைவி பெயரில் தினகரன் என்பவர் புதியதாக ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்றாலும் தவறு. அதனால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை

Sd/-A.Balakrishnan,
I Additional District Judge,
Ranipet.